# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களை நியமித்தல்

### 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழ் இலங்கையில் நாணயமாற்று வியாபாரத்தில் (வெளிநாட்டு நாணயங்களை வாங்குதல், விற்பனை செய்தல் மற்றும் பரிமாற்றுதல்) ஈடுபடுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தின் முகவராகத் தொழிற்படுகின்ற இலங்கை மத்திய வங்கி, அதன் சார்பில் மத்திய வங்கியால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 4(2) இன் நியதிகளுக்கமைய வெளிநாட்டு நாணயங்களை வாங்குவதற்கு, விற்பதற்கு மற்றும் பரிமாற்றுவதற்கு (நாணயமாற்று வியாபாரம்) மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்படுவதற்கு 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட"வரையறுக்கப்பட்ட கம்பனிகள்" வாய்ப்புக்களைக் கொண்டுள்ளன என்பதனை தெரிவிக்கின்றது. ஆர்வமுள்ள கம்பனிகள் தங்களின் விண்ணப்பங்களை பின்வரும் தகவல்களின் அடிப்படையில் அனுப்பி வைக்கலாம்.

2 **விண்ணப்பதாரிகளினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பிரமாணங்கள் மற்றும் ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும்**

2.1 மட்டுப்படுத்தப்பட்ட வணிகர் ஒருவராக நியமிப்பதற்காக விண்ணப்பிப்பதற்கு கம்பனியொன்று தகுதிவாய்ந்ததாக இருப்பதற்கு தேவையான பிரமாணங்களையும் ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளையும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் வெப்தளமான http://www.dfe.lk இல் பெற்றுக் கொள்ளலாம்.

2.2 நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான அனுமதி கலண்டர் ஆண்டு அடிப்படையில் பின்வருவனவற்றில் (i)இற்கோ அல்லது (ii)இற்கோ வழங்கப்படும் என்பதுடன் மேலே 2.1இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்கள் மற்றும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்வதன் அடிப்படையிலேயே தொடர்ந்துவரும் ஆண்டிற்கான புதிய அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

(i) வெளிநாட்டு நாணயத்தினை வாங்குதல் மற்றும் பரிமாற்றுதல்

(ii) வெளிநாட்டு நாணயத்தினை வாங்குதல், விற்பனை செய்தல் மற்றும் பரிமாற்றுதல்

3 **விண்ணப்பிக்கும் நடைமுறை**

3.1 மேலே பந்தி 2.1இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்கள் மற்றும் ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வோர் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலான **விண்ணப்பங்களை முறையாக பூரணப்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம்** அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

3.2 **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**

(i) வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நாணயமாற்று வியாபாரம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) **குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை** வெளிநாட்டுச் செலாவணித் திணைக்கள வெப்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளமுடியும் http://www.dfe.lk.

(iii) கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"மட்டுப்படுத்தப்பட்ட வணிகர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பம்"** என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) **ஏனையவற்றுக்கிடையில், பின்வரும் சந்தர்ப்பங்களில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

(அ) குறித்துரைக்கப்பட்ட படிவத்திலன்றி அல்லது பூரணமற்ற விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.

(ஆ) விண்ணப்பப் படிவத்தின் **அட்டவணை I**இல் பட்டியலிடப்பட்டுள்ள பிரமாணங்களுடன் விண்ணப்பதாரி இணங்காமை.

(இ) விண்ணப்பப் படிவத்தின் **அட்டவணை II**இல் பட்டியலிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் விண்ணப்பதாரி இணங்காமை

(ஈ) விண்ணப்பப் படிவத்தின் **அட்டவணை III**இல் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களும் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க இணைக்கப்படாமை.

4 விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு, நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வணிகர் ஒருவராக நியமிக்கப்பட்டிருப்பதற்கு விண்ணப்பதாரி பொருத்தமானவரா என்பதனை தீர்மானிப்பதற்கு மற்றும் மேற்கூறப்பட்ட வெப்தளத்தில் தற்போது உள்ளடக்கப்பட்டிருப்பவை தவிர்ந்த வேறு ஏதேனும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை காலத்திற்கு காலம் விதிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி உரிமையினைக் கொண்டுள்ளது.

பணிப்பாளர், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
☎ 0112398523, 0112398597 @ dfe@cbsl.lk